**MCOP. 73/2022**

**நாள்.. 24.06.2023**

**ம.சா. 1 –** ராமநாதன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2 ஆம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>2 ஆம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

விபத்து சமயத்தில் நான் இராமநாதபுரம் குடும்பநல நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்தேன். விபத்திற்கு பின்பு நான் பணியில் சேர்ந்து பிறகு பணிஓய்வு பெற்றேன் என்று சொன்னால் சரிதான். நான் பூரண குணமடைந்த பிறகு தான் பணியில் சேர்ந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பணிஓய்வு பெற்ற பிறகு வீட்டில் இருந்து கொண்டு விவசாயம் வேலைகளை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தேவிப்பட்டினத்தில் இருந்து என் ஊரான சிங்கனேந்தலுக்கு போய்க்கொண்டிருந்தேன். விபத்து நடந்தபோது மதியம் 01.00 மணி இருக்கும். விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தில் போய்க்கொண்டிருந்தேன், அந்த வாகனத்தின் பதிவு எண்.TN 65 1810. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ சிகிச்சை மற்றும் மருத்துவ செலவு ஆவணங்களின் உண்மைத்தன்மையை அவை சம்மந்தப்பட்ட மருத்துவரை விசாரித்தால்தான் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் அதைப்பற்றி தெரியவில்லை. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு மிகஅதிகம் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாததால் எனக்கு 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு அளிக்க கடமைப்பட்டு இ,ருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2 ஆம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை–</u> இல்லை.